திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மணிக்கு எங்களை வரச்சொல்லி.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெளிநடப்புச் செய்வதாக அவர்கள் சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள். அதிலே என்ன உங்களுக்கு ஆராய்ச்சி? (குறுக்கீடு) உட்காருங்கள். இதையெல்லாம் நீங்கள் கேட்கக் கூடாது. அவசியமா, இல்லையா என்பதை நீங்கள் முடிவு செய்யக்கூடாது. இது என்ன விளையாட்டு?

4. சட்ட முன்வடிவுகள்—அறிமுகம் செய்தல்.

(அ) வேளாண் விளை பொருள் சந்தைகள் சார்ந்த சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1991.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளை பொருள் சந்தைகள் சார்ந்த சட்டங்கள் (திருத்த) சட்டமுன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

Thiru M. SUNDARADAS : Sir, I oppose the Bill at the introduction stage itself.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி.

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளை பொருள் சந்தைகள் சார்ந்த சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.